பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 26 வெள்ளிக்கிழமை 08.04.2022 கதிர் 23

## மன்னாரில் இருந்து 4 பேர் தனுஷ்கோடியில் தஞ்சம்

மன்னாரில் இருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் புகலிடம் கோரி இந்தியாவின் தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர்.

மன்னார் முத்தரிப்பு துறையைச் சேர்ந்த தம்பதியினர் இருவர் தமது 10 வயது மகள் மற்றும் இரண்டரை வயதான மகனுடன் இன்று அதிகாலை படகு ஒன்றில் புறப்பட்டு 2 மணியளவில் தனுஷ்கோடியின் அரிச்சல் ☞2

# கோட்டாபய அரசுக்கு எதிராகப் பிரேரணை



## சபையில் சஜித் அதிரடி அறிவிப்பு

**மக்கள் கோரிக்கையை ஏற்று இந்த அரசு பதவி விலகாவிட்டால், அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.**

**இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-**

**அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக ஜனாதிபதிக்கு சாதாரண நிறைவேற்று அதிகாரம் அல்லாமல் சிறப்பு நிறைவேற்று அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. அதனை நீக்க வேண்டியது அவசியமாகும்.** ☞2

## யாழ் போதனா வைத்தியசாலையில் இன்று வைத்தியர்கள் கவனவீர்ப்பு!

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஏப்.08

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று ☞2

## அடுத்த வாரம் புதிய அமைச்சரவை

அடுத்த வாரம் புதிய அமைச்சரவைநியமிக்கப்படும்என்று ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நாட்டில் அமைச்சர்கள் இல்லை என எதிரணிகள் சுட்டிக்காட்டிய விடயத்துக்குபதிலளிக்கையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன், ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஜனநாயக வழியில் தீர்வைத் தேடுங்கள் பல நாடுகள் இணைந்து வேண்டுகோள்

கொழும்பு,ஏப்.08

“இலங்கை மக்களைப் பாதித்துள்ள தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான மற்றும்ஜனநாயகவழிமுறைகளை ஆராயுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.”


- இவ்வாறு உலக நாடுகள் பல ஒன்றிணைந்து இலங்கையைக் கோரியுள்ளன.

இலங்கையின் நிலைமை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுடன் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

‘இலங்கையின் அண்மைய செயற்பாடுகள்பற்றியகூட்டுஅறிக்கை’ - என்ற தலைப்பிலான அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை ☞2

## இலங்கைக்கு இப்போது கொந்தளிப்புக் காலம்!

### நியூஸிலாந்து பிரதமர் கூறுகின்றார்



பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் தொடர்வதால், இலங்கை முழுதும் கொந்தளிப்பான நிலையை அனுபவித்து வருவதாக ☞2

## நாட்டு பிரச்சினை தீரும்வரை நாடாளுமன்றம் வரமாட்டேன்!

### சபையில் சாமர சம்பத் சபதம்



நாட்டிதற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தீரும்வரை, நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கமாட்டேன்.

இவ்வாறு இன்று அதிரடி அறிவிப் பொன்றை விடுத்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும், மொட்டு கட்சியின் பதுளைமாவட்டநாடாளுமன்றஉறுப்பினருமான சாமர சம்பத் தசநாயக்க.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், சபைக்கு தெரியப்படுத்தாமல் - சபையின் அனுமதியை பெறாமல் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் சபை அமர்வுகளில் பங்குகேற்காவிட்டால், அவர் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்து ☞2

## திருமலைவாசிகள் பன்னிருவர் மன்னாரில் கைதாகி விடுவிப்பு



தமிழகம் செல்ல இருந்தவர்களாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்.ஏப்.08

மன்னார் பேசாலைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்த 12 பேர் ☞2

## நிதியமைச்சர் நானேதான் அலி சப்றி இன்று ஒப்புதல்



நாட்டின் நிதியமைச்சர் நான்தான் என்று இன்று நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார் அலி சப்றி.

முன்னர் நீதி அமைச்சராக இருந்தவர் அவர்.

அமைச்சர்கள் எல்லோரும் கூண்டோடு ராஜினாமா செய்தபோது அவரும் ராஜினாமாச் செய்தார். அப்படி ராஜினாமாச் செய்தவர்களின் பெயர் ☞2

## யாழில் கொன்று புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது

### மோ.சைக்கிளும் தோண்டி எடுப்பு







(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.08

யாழ்ப்பாணம் மணியந்தோட்டத்தில் வீட்டு வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலத்தை தோண்டி எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா மற்றும் சட்ட மருத்துவ வல்லுநர் எஸ்.பிரணவன் ஆகியோரின் முன்னிலையில் இந்தப் பணி இன்று முன்னெடுக்கப்பட்டது. ☞2

# மருத்துவ சேவையே முடங்கும் நெருக்கடி நெருங்கி வருகிறது

## மருத்துவ அதிகாரி எச்சரிக்கை



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஏப்.08

அத்தியாவசிய மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும் இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் முழுமையான நெருக்கடி நிலை உருவாகுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் போதனா வைத்தியசாலை கிளைச் செயலாளர் க.மயூரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்று இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே க.மயூரன் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதற்கான இரசாயன பதார்த்தங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரசாயன பதார்த்தங்கள் விநியோகிக்கபடுவதால் இனி வருங்காலங்களில் இச்சோதனைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலோ முழுமையாகவோ நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். இதே நிலைமை தொடர்ந்தால் இரத்தப்பரிசோதனை மேற்கொள்வதில் பல இடர்பாடுகள் ஏற்படும். - என்றார்.

# இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை

கண்டி, ரங்கல - எலுகொல்ல பிரதேசத்தில் இன்று காலை 28 வயதுடைய இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கியுடன் சிற்றூர்தியில் வந்த இனந்தெரியாத குழுவினரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் விளைவாகவே இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் சந்தே கம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ரங்கல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேற்றம்

நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்விலிருந்து இரு எம்.பி.க்களை வெளியேற்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த இரு எம்.பிக்களையும் சபையிலிருந்து வெளியேற்றுவதற்கென நாடாளுமன்ற அமர்வு மீண்டும் சிறிது நேரத்துக்கு இடைநிறுத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகிய இருவருமே இவ்வாறு சபையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனா.

நாடாளுமன்ற அமர்வை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் அறிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து, மீண்டும் சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டபோது சபாநாயகர் இந்த முடிவை அறிவித்தார்.

சபை அமர்வுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டமையின் காரணமாகவே இவர்கள் இருவரும் வெளியேற்றப்படுவதாக சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

## நாட்டு பிரச்சினை தீரும்வரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவார்.

எனவே, இப்பிரச்சினை மூன்று மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பதே சாமர சம்பத் தசநாயக்கவின் கோரிக்கையாக அமைந்தது.

நாடாளுமன்றம் இன்று (08.04.2022) முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

நான் பிரதமர் பதவியை வகிப்பதற்கு இங்கு வரவில்லை. ஊவா மாகாண முதல்வர் பதவியை வழங்கினால் அதனை செய்யக்கூடியதாக இருக்கும்.

எனக்கு ஆங்கிலம் தெரியாது, சர்வதேச தொடர்பும் இல்லை.

நாட்டைக் கட்யெழுப்பவே நாடாளுமன்றம் வந்ததாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். இதனை செய்யவே ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவும் சாதாரண எம்.பியாக வந்துள்ளார். எனவே, அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

2015 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றார். மஹிந்த தோல்வி அடைந்தார். ஆனால் புனித பூமிக்கு யாத்திரை செல்வதுபோல, ஆயிரக்கணக்கான மக்கள் மஹிந்தவின் வீட்டுக்கு அணிவகுத்து சென்றனர். எவரும் வெற்றிபெற்ற மைத்திரியின் வீட்டுக்கு வரவில்லை.

அன்று அவ்வாறு செயற்பட்ட மக்கள், இன்று மஹிந்தவின் தங்காலை வீட்டை சுற்றிவளைக்கும் நிலைமை உருவாகியுள்ளது. எனவே, நாட்டு மக்களின் மனநிலைமையை புரிந்துசெயற்பட வேண்டும். இப்பிரச்சினை தீரும்வரை சபைக்கு வரமாட்டேன். - என்றார்.

சாமரசம்பத்சதநாயக்க ஊவா மாகாண முதல்வராக செயற்பட்டவர். பதுளையில் தமிழ் பாடசாலை அதிபர் ஒருவரை முழந்தாளிட வைத்து சர்ச்சையிலும் சிக்கியவர்.

## நிதியமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அதன் பின்னர் மீண்டும் பதவியேற்ற நான்கு அமைச்சர்களில் அலி சப்ரியும் ஒருவர். அவருக்கு நிதி அமைச்சு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர் அந்தப் பதவியை ஏற்ற அடுத்த நாளே தாம் பதவியிலிருந்து விலகுகிறார் எனத் தெரிவிக்கும் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார். அதனால் அவர் அந்தப் பதவியில் இருந்து அடுத்த நாளே விலகிவிட்டார் எனக் கருதப்பட்டது.

எனினும், இன்று அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த போது "நீங்கள் இன்னமும் நிதியமைச்சர்தானா?" - என்ற கேள்வியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சுமந்திரன் குறுக்கிட்டுக் கேட்டார்.

"ஆமாம். என் ராஜினாமாவை ஜனாதிபதி ஏற்கவில்லை. அதனால் நான் தொடர்ந்தும் நிதியமைச்சராக இருக்கிறேன்" என்றார் அவர்.

பெரும் நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் இலங்கை அதிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் கதவை தட்ட வேண்டிய நிலையில் உள்ளது. அதற்கான காலம் நெருங்கி வருகையில் அந்தப் பணியை முன்னெடுப்பதற்காக அலி சப்ரி தற்காலிகமாக நிதியமைச்சர் பதவியை தொடர்கிறார் எனக் கூறப்பட்டது.

## யாழில் கொன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயல் கிராமத்தைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் காணாமற் போயிருந்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தப் பெண்ணை அடித்துக் கொலை செய்து புதைத்தனர் என்ற குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் அவர்களது மகனும் கைது செய்யப்பட்டனர்.

பணக் கொடுக்கல் வாங்கல் காரணமாக எழுந்த முரண்பாட்டினால் சந்தேக நபர்கள் பெண்ணை அடித்துக் கொலை செய்திருந்தனர். பெண்ணின் மோட்டார் சைக்கிளையும், சடலத்தையும் அவர்கள் வீட்டு வளவுக்குள் குழிதோண்டிப் புதைத்திருந்தனர்.

மோட்டார் சைக்கிளும் உயிரிழந்த பெண்னின் சடலமும் தற்போது தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

## திருமலைவாசிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

திருகோணமலையில் இருந்து மன்னார் வந்து விடுதியில் தங்கியிருந்த சமயம் இந்தியாவிற்குத் தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்தனர் என்ற சந்தேகத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் தொடர்பிலும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அனைவரையும் திருகோணமலைக்கு திருப்பி அனுப்பி வைத்தனர்.

## ஜனநாயக வழியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளான (ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ருமேனியா) மற்றும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நோர்வே, சுவிட்சர்லாந்து மற்றும ஐக்கிய இராச்சியம் மையங்களுடன் இணைந்து பின்வரும் அறிக்கையை வெளியிடுகிறது.

ஒன்று கூடும் சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும் அமைதியாக நடைபெறும் சந்தர்ப்பத்தில், அவை எந்த ஒரு ஜனநாயக சமூகத்தினதும் தூண்களாகும். எனவே அனைத்துத் தரப்பினரும் நிதானத்துடன் தொடர்ந்து செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை ஒரு நேர்மறையான முன்னெடுப்பாக நாம் கருதுகிறோம்.

இலங்கை மக்களைப் பாதித்துள்ள தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான மற்றும் ஜனநாயக வழிமுறைகளை ஆராயுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிலையான பாதைக்குக் கொண்டு வருவதற்கு தேவையான சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் தீர்க்கமான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டிய நிலைமையின் தீவிரத் தன்மையை நாம் வலியுறுத்துகிறோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் போதனா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

இன்று காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்பகுதியில் ஒன்றுகூடிய வைத்தியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தியாவசிய மருந்துகள் இல்லை, சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, இலவச சுகாதாரம் இல்லாது ஒழிக்கப்படுகின்றது, இலவச மருத்துவம் ஆபத்தில் உள்ளது, மருத்துவம் மக்களின் அடிப்படை உரிமை, மக்களின் உயிருடன் விளையாட வேண்டாம், சுகாதார வசதிகளை இல்லாதொழிக்க வேண்டாம் - என்பன போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் வைத்தியர்களால் தாங்கி பிடிக்கப்பட்டது.

அரசின் மோசமான நிதி நிர்வாகம் காரணமாக அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் சுகாதார கட்டமைப்பு சீரழிந்து வருகின்றது என்றும், மக்களின் உயிர்கள் ஆபத்தில் உள்ளன என தெரிவித்தும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் போராட்டத்தில் ஈடுபட்டது.

## கோட்டாபய அரசுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறானதொரு அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழ் தற்காலிக அரசோ அல்லது இடைக்கால அரசோ கொண்டு செல்ல முடியாது. ராஜபக்ஷக்களின் தலைமைத்துவம் அல்லது அவர்களுடன் தொடர்புடையோா இந்தச் செயற்பாடுகளிலிருந்து விலகி இருப்பார்களாயின் நாம் பேச்சுக்குத் தயார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படாவிட்டால், அரசு பதவி விலகாவிட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் - என் றார்.

## மன்னாரில் இருந்து .....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனை கடற்கரையை சென்றடைந்துள்ளனர்.

அவர்களை தமது பொறுப்பில் எடுத்துள்ள பொலிஸார் அவர்களை மண்டபம் கடலோரக் காவல் நிலையத்தில் ஒப்படைத்து ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் மண்டபம் அகதிகள் முகாமில் சேர்க்கப்படுவார்கள் என தெரிவித்தனர்.

இலங்கையில் தற்போது நிலவிவரும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இந்தியாவுக்கு அகதிகளாக தப்பிச்செல்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகின்றது.

இதற்கு முன்னதாக மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளை வாழ்விடமாக கொண்ட 3 குடும்பங்களை சேர்ந்த 16 பேர் இந்தியாவுக்கு தப்பி சென்றமை குறிப்பிடத்தக்கது .

## இலங்கைக்கு இப்போது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூஸிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டென் தமது உரை ஒன்றில் தெரிவித்துள்ளார். தொற்றுநோயால் பொருளாதாரத் தவறுகள் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக பணவீக்கம் அதிகரித்து உணவு, எரிபொருள் மற்றும் மருத்துவப் பொருள்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பொது நிதியை முறைகேடாக நிர்வகித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் தலைமைத்துவத்தை மாற்றுமாறு இந்தப் மக்கள் போராட்டங்கள் கோருகின்றன.

இலங்கை தொடர்பான நடவடிக்கைகளை நியூஸீலாந்து அரசாங்கம் கண்டிக்க வேண்டும் என்று கோரி நியூசிலாந்து வாழ் இலங்கையர்கள் மனுவில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கையின் தலைமையை கண்டிக்கின்றீர்களா? என்று கேட்கப்பட் டபோது, ஆர்டென் சிறிது நேரம் உரையை நிறுத்தினார். ஆனால் இலங்கை மக்களிடையே வளர்ந்து வரும் விரக்தியை ஒப்புக்கொண்டார். இலங்கையில் இது மிகவும் கொந்த ளிப்பான காலகட்டம் என்று அவர் கூறி னார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொருந்தாத் தலைவர்கள்

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியமை போன்று இலங்கை வரலாற்றில் மிக மோசமான சித்திரைப் புத்தாண்டை இம்முறைதான் நாட்டுமக்கள் எதிர்கொள்ளப் போகின்றனர். ஆனால் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இதிலும் விட மிக மோசமான – ஆபத்தான – அழிவு நிலையில் தமது தேசிய திருநாள்களை எதிர்கொண்ட அனுபவம் அவர்களுக்கு ரொம்பவும் உண்டு.

ஆனால், இந்தத் தேசிய நெருக்கடியை – பேரிடரை – எதிர்கொள்ளும் பொறுப்புணர்வோடும் தந்திரோபாயத் தோடும் நமது அரசுத் தலைவர்களும் சரி, அரசியல் தலைவர்களும் சரி செயற்படவில்லை என்பதுதான் இதில் விசனத்துக்குரிய விவகாரமாகும்.

நாட்டின் நெருக்கடியை அறிந்து அவசியமான நேரங்களில் ராஜதந்திர ரீதியில் செயற்படுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடமும் எதிர்க்கட்சிகளிடமும் கோரிக்கை முன்வைத்துள்ளது.

அதுதான் விடயம். அந்தக் கூட்டு ராஜதந்திர அணுகுமுறை இங்கு இல்லை என்பதுதான் பிரச்சனை.

அனைத்து அரசியல் தரப்புகளுமே – அது, அரசுத் தலைமையாகட்டும், ஆளும் கட்சியாகட்டும், எதிர்க்கட்சிகளாகட்டும், இந்தத் தேசியப் பேரிடரை எதிர்கொள்ளும் விடயத்தைத் தேசிய நலனை முன்னிறுத்திச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. தத்தமதும், தத்தமது தரப்புகளினதும் சுய அரசியல் லாபக் கணக்கிலும், தமது பதவி மோக நிலையிலும் இருந்தே அவை இந்த விடயங்களை அணுகுகின்றன என்பது தெளிவு.

சர்வகட்சி மாநாட்டுக்கு வாருங்கள், பேசுவோம் என்பதும், அரசு தலைமைத்துவப் பொறுப்பிலிருந்து வீட்டுக்குச் செல்லுங்கள் என்று பொது வெளியிலும், நாடாளுமன்றத்திலும் சத்தமிட்டு குரல் எழுப்புவதும் பிரச்சினைக்குத் தீர்வை தரப்போவதில்லை. மேலும் விவகாரத்தைச் சிக்கலாக்கும்.

பிரச்சினைக்குத் தீர்வு ஜனாதிபதி பதவி விலகுவதாலோ, அமைச்சரவையை மாற்றியமைப்பதாலோ, அல்லது தேசிய அரசோ, காபந்து அரசோ, இடைக்கால அரசோ அதில் எதை அமைப்பதாலோ வந்து விடப்போவதில்லை.

எல்லாத் தரப்புகளும் கூட்டிணைந்து, இந்தப் பிரச்சினையை ஒரு நாடாக எதிர்கொண்டு மீண்டெழுவதற்கான வாய்ப்பை – சந்தர்ப்பத்தை – ராஜதந்திர அணுகுமுறையில் புதிய தந்திரோபாயத்துடன் கையாள்வதில்தான் வெற்றி தங்கியுள்ளது.

தங்கள் அரசியல் இலக்குகள், நோக்குகள், அபிலாசைஷகளுடன் அவரவர் இந்தப் பிரச்சினையை அணுகினால் தீர்வு கிட்டப் போவதில்லை. அல்லது வெளிவேஷத்துக்கு சர்வகட்சி மாநாடு கூட்டி, சகல தரப்பினருக்கும் கருத்து வெளியிட மேடை அமைத்துக் கொடுப்பதும் பயன்படப் போவதில்லை.

நாடு மூழ்கியுள்ள நெருக்கடி நிலை பற்றி விவரிக்கத் தேவையில்லை. எல்லோருக்கும் தெரிந்த விடயம் அது. அதிலும் விட இன்னும் பல மோசமான பல கட்டங்கள் அடுத்து வரப் போகின்றன என்பது ஒவ்வொருவருக்கும் தெரியும்.

ஆனால் இன்னும் கூட நாட்டின் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து – ஒன்றுக்கொன்று – நேரடியாக – பேச்சு நடத்தவே இல்லை. தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதானால் – அதற்கு ஒற்றுமைப்பட்ட முடிவும், செயற்பாடும் அவசியம் என்றால் – குறைந்தபட்சம் இவர்கள் இருவருமாவது தங்களுக்குள் பேசி, கருத்துப் பரிமாறி இருக்க வேண்டும்.

ஏனைய அரசியல்வாதிகளைப் போல இவர்கள் இருவருமே பொதுவெளியில் மாறி மாறி சேற்றை வாரி இறைக்கும் மூன்றாந்தர அரசியல்தான் செய்கின்றார்களே தவிர, பேரிடரை எதிர்கொண்டு நிற்கும் ஒரு நாட்டின் துயர்களையும் அத்தியாவசிய நிலைகளையும் உணர்ந்து செயல்படும் தேசியத் தலைவர்களாக இல்லை. இது பெரும்பாலும் நமது அரசியல் தலைவர்கள் அனைவருக்குமே பொருந்தும். நமது நாடு மோசமான பின்னடைவு நிலைக்குச் சென்றமைக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

# இராஜதந்திர ரீதியில் செயற்படுமாறு சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை!

இராஜதந்திர ரீதியில் செயற்படுமாறு அரசாங்கத்திடமும் எதிர்க்கட்சியிடமும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைக்கு ஜனநாயக ரீதியில், அரசியல் அமைப்புக்கு உட்பட்டு தீர்வு தேட வேண்டும் என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது நாட்டு அரசாங்க நிதியின் பொறுப்பாளர்கள் என்றும் அந்தப் பொறுப்பிலிருந்து தாங்கள் விலக முடியாது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிதி அமைச்சின் செயலாளராக மஹிந்த சிறிவர்தன நியமனம்



நிதி அமைச்சின் புதிய செயலாளராக மஹிந்த சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று(வியாழக்கிழமை) மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

# மோட்டார் சைக்கிள் விபத்து 22 வயது இளைஞன் சாவு!

துணைவி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தமையுடன் இன்னொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

நவாலியில் உள்ள உறவினரின் வீட்டிற்கு பூப்புனித நீராட்டு விழாவிற்குச் சென்றுவிட்டு தங்களது வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த இளைஞர்களது மோட்டார் சைக்கிள் துணைவி வீதியில் உள்ள மரத்துடன் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞன் உயிரிழந்துள்ளமையுடன் பின்னால் இருந்த இளைஞன் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

அராலி – செட்டியார் மடம் பகுதியைச் சேர்ந்த புலேசாந் என்ற 22 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது உடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதியை உடனடியாகப் பதவி விலகக் கோரி கறுப்பு உடை அணிந்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!




ஜனாதிபதியை உடனடியாக பதவி விலகக் கோரி கண்டியில் கறுப்பு உடை அணிந்த ஏராளமான பாடசாலை மாணவர்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று (வியாழக்கிழமை) காலை தலதா வீதியில் திரண்ட மாணவர்கள், 'எங்களின் கனவுகளை எமக்கு கொடுங்கள்' உள்ளிட்ட வாசகம் எழுதப்பட்ட சுவரொட்டிகளை ஏந்திய வாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு குழந்தைகளை அனுப்ப வேண்டாம் என பெற்றோர்களுக்கு பொலிஸார் அறிவித்திருந்த நிலையில், ஏராளமான மாணவ, மாணவிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

1989 ஆம் ஆண்டு சில பாடசாலைகளில் அரச எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மாணவர்கள் தூண்டப்பட்ட போதிலும், அனைத்துப் பாடசாலைகளும் ஒழுங்கமைக்கப்பட்ட மாணவர் போராட்டத்தை முன்னெடுத்தது இலங்கையில் இதுவே முதல் தடவை என தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு Kalaikkathir
வெள்ளிக்கிழமை 08.04.2022

# ரஷ்ய அதிபரின் மகள்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை



உக்ரைன் - ரஷ்யா இடையில் போர் நடந்துவரும் நிலையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் மகள்களுக்கு பல பொருளாதார தடைகளை விதித்து, அமெரிக்கா அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, பெப்ரவரி 24ம் திகதி முதல் ரஷ்ய படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கிடையே, கீவ் நகரில் ராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதாக அறிவித்து, தன் படைகளை ரஷ்யா திரும்பப் பெற்றது. அங்கிருந்து விலகுவதற்கு முன், மக்களை ரஷ்ய படையினர் படுகொலை செய்தனர் என உக்ரைன் குற்றஞ்சாட்டி வருகிறது

இந்நிலையில், ரஷ்யாவின் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முடக்க தவறிவிட்டதாக, உலக நாடுகள் மீது உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டி உள்ளார்.இதன் காரணமாக, ரஷ்யா மீது கடும் பொருளாதார தடைகளை விதிக்கவும், உக்ரைனுக்கு ராணுவ ஆயுதங்களை வழங்கவும் மேற்கத்திய நாடுகள் ஆயத்தமாகி வருகின்றன.உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் தொடங்கியது முதல், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடுமையாக விமர்சித்து வருகிறார். புடின் மீது பல தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. இந்நிலையில், புடினின் மகள்களான மரியா புடினா மற்றும் கேட்டரினா டிகோனோவா மீது, பல தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. இதன் வாயிலாக, அமெரிக்காவில் அவர்களுக்கு உள்ள அனைத்து சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன.

இதேபோல், ரஷ்ய பிரதமர் மிக்கெய்ல் மிஸ்தின், ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாவ் ரோவின் மனைவி மற்றும் குழந்தைகள், ரஷ்யாவின் முன்னாள் அதிபரான டிமிட்ரி மெத்வெதேவ் ஆகியோருக்கும், ரஷ்யாவைச் சேர்ந்த இரண்டு வங்கிகளுக்கும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

# நாடாளுமன்றத்தை கலைத்த உத்தரவு செல்லாது பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு






நம்பிக்கை வாக்கெடுப்பை சந்திக்க இம்ரான் கான் அரசுக்கு பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான் கானை பதவி நீக்கம் செய்ய அந்நாட்டு நாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்தன. இந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு துணை சபாநாயகரால் ரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தல் நடத்த வேண்டும் என்று அந்நாட்டு அதிபருக்கு கடிதம் எழுதினார்.

இம்ரான் கானின் பரிந்துரையை ஏற்று நாடாளுமன்றத்தை கலைத்து பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து அந்நாட்டு எதிர்க்கட்சிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. நேற்று நடைபெற்ற விசாரணையின் போது அதிபர் ஆரிப் ஆல்வியின் உத்தரவை பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் ரத்து செய்தது.

பிரதமர் இம்ரான் கான் அரசியலமைப்புச்சட்டத்திற்குக்கட்டுப்பட்டவர் என்றும், அதனால் நாடாளுமன்ற சபைகளை கலைக்குமாறு அதிபர் ஆரிப் அல்விக்கு அவர் அறிவுறுத்த முடியாது என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.

மேலும் நம்பிக்கையில்லா பிரேரணையின் மீதானவாக்கெடுப்பு துணை சபாநாயகரால் ரத்துச் செய்யப்பட்டது, அரசியலமைப்பிற்கு எதிரானது என்றும் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒருமனதாக தீர்ப்பளித்துள்ளது. இதையடுத்து ஏப்ரல் 9 ஆம் திகதி பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இம்ரான் கான் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர அனுமதிக்கப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை தனது கட்சி ஏற்கும் என்று இம்ரான் கான் கூறியுள்ளார் என தகவல்கள் வெளியான நிலையில் பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை அந்நாட்டு எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன.



# உக்ரைன் தேசியக் கொடியை முத்தமிட்டார் பாப்பரசர்

உக்ரைனின் புச்சா நகரில் நடைபெற்ற கொலைகளுக்கு போப் பிரான்சிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், உக்ரைனின் தேசியக் கொடியை அவர் முத்தமிட்டுள்ளார்.

உக்ரைனில் நடைபெறும் போர் தொடர்பான சமீபத்திய செய்திகள் நிம்மதியையும் நம்பிக்கையும் அளிப்பதற்கு பதிலாக, புச்சா நகரில் நடைபெற்ற படுகொலைகள் உள்ளிட்ட புதிய கொடுமைகளை ஏற்படுத்தியுள்ளன, என அவர் தெரிவித்தார் என, ராய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரிவித்துள்ளது. பொதுமக்கள், பாதுகாப்பற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக கொடுமைகள் அதிகரித்துள்ளன என அவர் தெரிவித்தார். உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, கடந்த செவ்வாய்கிழமை ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில், இரண்டாம் உலகப் போருக்கு பிறகு கொடுமையான குற்றங்களை ரஷ்யப் படைகளை இழைத்துவருகின்றன என தெரிவித்திருந்தார். ஆனால், இந்த குற்றச்சாட்டுகளை ரஷ்ய அதிபர் மாளிகை மறுத்துள்ளது.

போப் பிரான்சிஸ் தனக்கு புச்சாவிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறிய உக்ரைனின் தேசியக் கொடியை பார்வையாளர்களுக்காக விரித்துக்காட்டினார். அப்போது, பார்வையாளர்கள் கைதட்டினர். இதையடுத்து, உக்ரைனிலிருந்து செவ்வாய்கிழமை அங்கு அகதிகளாக வந்திருந்த குழந்தைகளை தன்னிடம் வருமாறு அழைத்தார். பாதுகாப்பான நிலத்தை அடைவதற்காக இக்குழந்தைகள் உக்ரைனிலிருந்து இங்கு வந்துள்ளனர். நாம் அவர்களை மறக்கக்கூடாது. உக்ரைன் மக்களை மறக்கக்கூடாது என தெரிவித்தார். பின்னர் அக்குழந்தைகளுக்கு சாக்லேட் ஈஸ்டர் முட்டைகளை அன்பளிப்பாக வழங்கினார்



# ஆயுதங்களை தந்து உதவுமாறு நேட்டோவிடம் உக்ரைன் கோரிக்கை

உக்ரைன் மீது ரஷ்யா 43வது நாளாக போர் தொடுத்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வர பல நாடுகள் முயற்சித்த போதும் அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்து வருகின்றன. உக்ரைன் தலைநகர் கீவ், மரியப்போல், கார்கீவ், கார்சன் உள்பட பல்வேறு நகரங்களில் ரஷ்ய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. ரஷ்ய படைகளின் தாக்குதலுக்கு உக்ரைன் ராணு வமும் தக்க பதிலடி கொடுத்து வருகிறது. மேலும், ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகளை உக்ரைன் படைகள் மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளன.

இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ராணுவ ஆயுதங்கள், தளவாடங்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இதற்கிடையில், ரஷ்யாவின் ஆக்கிரமிப்பில் இருந்த புச்சா என்ற நகரை உக்ரைன் மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. அந்த நகரில் இருந்த பலர் ரஷ்ய படையினரால் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளனர் என உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. சாலைகள், பதுங்குகுழிகள் என அனைத்து இடங்களிலும் மக்கள் கைகள் கட்டப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டுள்ளனர் எனவும் இந்த செயலை ரஷ்யா செய்துள்ளதாகவும் உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. புச்சா நகரில் பெண்கள் ரஷ்ய படையினரால் பாலி யல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளனர் எனவும் இது இனப் படுகொலை எனவும் உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. புச்சா நகரின் சாலைகளில் மனித உடல்கள் கிடங்கும் படங்கள் உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில், பெல்ஜியம் தலைநகர் பிரேசில்ஸ் - இல் உள்ள நேட்டோ அமைப்பின் தலைமையகத்திற்கு உக்ரைன் வெளியுறவுத்துறை மந்திரி டிமிட்ரோ குலிபா வருகை வந்தார். அவர் நேட்டோ அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் வெளியுறவுத்துறை மந்திரிகளுடன் பேச்சு நடத்தினார். அவர் பேசுகையில், எனது நோக்கம் மிகவும் எளிமையானது, அது என்னவென்றால் ஆயுதங்கள், ஆயுதங்கள், ஆயுதங்கள் தான் எப்படி சண்டையிடுவது? எப்படி வெற்றிபெறுவது? என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், உக்ரைன் கேட்டுக் கொண்ட நிலையான மற்றும் போதுமான ஆயுதங்கள் வழங்கப்படவில்லையென்றால் அந்த வெற்றி மிகப் பெரிய தியாகத்துடன் சேர்ந்து தான் வரும். அதிக ஆயு தங்கள் எங்களுக்கு கிடைத்து அது விரைவாக உக்ரை னுக்கு வந்தால் புச்சா நகரில் நடந்த அநீதி போன்று அல்லாமல் அதிக மனித உயிர்கள் பாதுகாக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# ஏழு பேர் விடுதலை தொடர்பான ஆவணங்களை ஜனாதிபதிக்கு ஆளுநர் ரவி அனுப்பியுள்ளார் என தமிழக அரசு நீதிமன்றில் தகவல்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள ஏழு பேரதும் விடுதலை குறித்த ஆவணங்களை ஜனாதிபதிக்கு ஆளுநர் அனுப்பியுள்ளார் என சென்னை உயர்நீதிமன்றில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் நளினி, ஆளுநரின் முடிவுக்கு காத்திருக்காமல் தன்னை விடுதலை செய்யக்கோரி தொடர்ந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில், ஏழு பேர் விடுதலை தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தில் பேறறிவாளன் விவகாரம் மட்டும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டதா? அல்லது ஏழு பேரின் வழக்கும் அனுப்பப்பட்டுள்ளதா? என கடந்த மார்ச் 30ஆம் திகதி அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

இந்தக் கேள்விக்கு தமிழக அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலில், பேறறிவாளன் மட்டுமின்றி ஏழுபேரின் விடுதலை குறித்த ஆவணங்களும் ஜனாதிபதிக்கு தமிழக ஆளுநரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, எந்தத் திகதியில் குறித்த ஆவணங்கள் அனுப்பப்பட்டன என, தமிழக அரசு விளக்கமளிக்க உத்தரவிட்ட தலைமை நீதிபதி, விசாரணையை ஏப்ரல் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

# பிரதமர் மோடியுடன் சரத்பவார் சந்திப்பு மராட்டிய அரசியல் களத்தில் சலசலப்பு



மராட்டிய மாநிலத்தில் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தலைமையில் சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது.

இந்தக்கூட்டணிக் கட்சித்தலைவர்கள் மீது சி.பி.ஐயும், மத்திய அமுலாக்கப்பிரிவு இயக்குநரகமும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில், சில நில பேரங்கள் தொடர்பாக சட்டவிரோதப் பணப்பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின் கீழ், சிவசேனாவின் மூத்த தலைவர் சஞ்சய் ராவத்தின் மனைவி மற்றும் அவரது இரு கூட்டாளிகளின் 11.15 கோடி சொத்துகளை அமுலாக்கப்பிரிவு இயக்குநரகம் முடக்கியுள்ளது.

இதேபோன்று மும்பை முன்னாள் பொலிஸ் கமிஷனர் பரம்பீர் சிங் சுமத்திய ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மராட்டிய முன்னாள் உள்துறை அமைச்சருமான அனில் தேஷ்முக் மீது சி.பி.ஐ. ஊழல் வழக்கு தொடுத்துள்ளது. இந்த வழக்கில் சிறையில் இருந்த அவரை சி.பி.ஐ. இரு நாள்களுக்கு முன் தனது காவலில் எடுத்துள்ளது. இது போன்ற மேலும் சில ஆளும் கூட்டணித் தலைவர்கள் மீதும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள், மராட்டிய அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்தப் பரபரப்பான சூழலில் இந்தியப் பிரதமர் மோடியை அவரது அலுவலகத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் நேற்றுக் காலையில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு 20 நிமிடங்கள் நடந்தன என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தாலும், அது பற்றிய அதிகார பூர்வ தகவல்கள் எதையும் வெளியாகவில்லை.

இந்தச் சந்திப்பின் பின்னணி என்ன அது குறித்து, சரத்பவாரின் சகோதரரின் மகனும் மராட்டிய துணை முதலமைச்சருமான அஜித் பவாரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளித்தபோது, நாட்டின் பிரதமரும், ஒரு கட்சியின் தேசியத்தலைவரும் வளர்ச்சிப்பணிகள் தொடர்பாக சந்திக்கலாம். பாராளுமன்ற கூட்டத் தொடரில் சில பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றன. அவை தொடர்பாக சந்திப்பு நடைபெற்று இருக்கலாம். எங்கள் கூட்டணித் தலைவர்கள் மீது மத்திய விசாரணை அமைப்புகள் நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு நடந்திருக்கிறதே என கேட்கிறீர்கள், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அதேவேளையில் 12 எம்.எல்.சிக்களை நியமிக்கக்கோரி நாங்கள் ஆளுநரை பல முறை கேட்டுக் கொண்டோம். ஆனால், அவர் மௌனம் சாதித்து வருகிறார். இந்தப் பிரச்சினை தொடர்பாகவும் பிரதமரை சரத்பவார் சந்தித்து இருக்கலாம், என்று தெரிவித்திருக்கிறார்.

தேசியவாத காங்கிரஸ் மாநில தலைவரும், மந்திரியுமான ஜெயந்த் பாட்டீல் கூறுகையில், மாநில மந்திரி சபை பரிந்துரையை ஏற்று 12 எம்.எல்.சிக்களை ஆளுநர் நியமிக்காத விவகாரத்தை உயர்மட்ட கவனத்துக்கு கொண்டு செல்லுமாறு சரத்பவாரிடம் நாங்கள் கூறியிருந்தோம். அதுபற்றி அவர் பிரதமரிடம் புகார் அளித்து இருக்கலாம், என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமர் மோடியுடனான சந்திப்புக்கு பிறகு சரத்பவார், டெல்லியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது, குறித்த சந்திப்பு பற்றி நேரடியாகப் பதிலளிக்காது, சஞ்சய் ராவத் மீது என்ன அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது? இது அநீதி. ராவத் மீது நடவடிக்கை எடுக்க என்ன தூண்டுதல்? அவர் சில உண்மைக் கருத்துகளை வெளியிடுகிறார், என தெரிவித்திருக்கிறார்.



# மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் தமிழக ஆளுநர் ரவி சந்திப்பு

மூன்று நாள்கள் பயணமாக நேற்று டெல்லிக்குச் சென்றுள்ள தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜநாத் சிங்கை சந்தித்து தற்போது ஆலோசனை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் தமிழகம் சார்ந்த விடயங்கள் குறித்தும், இலங்கைத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சாமானியர்களிடம் மத்திய அரசு கொள்ளையடிக்கிறது காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் குற்றச்சாட்டு

இந்தியா முழுவதும் கடந்த 16 நாள்களாக பெற்றோல் விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருந்து வருகிறது. தினந்தினம் அதிகரிக்கும் விலையால் சாமானிய மக்கள் அச்சத்திற்குள்ளாகி வருகின்றனர். பெற்றோல் விலை 80 காசுகள் உயர்த்தப்பட்டதன் மூலம் 16 நாள்களில் ஒரு லீற்றர் விலை 10 ரூபாவுக்கு மேல் உயர்ந்துள்ள நிலையில், இந்த எரிபொருள் விலை உயர்வை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் நானா படோலே நேற்று வெளியிட்ட டுவிட்டர் பதிவில், பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை உயர்வு மூலம் ஏழை மக்களின் பணம் தொடர்ந்து கொள்ளையடிக்கப்பட்டு வருகிறது. இரு வாரங்களில் பெற்றோல், டீசலின் விலை 10 ரூபாவினால் உயர்ந்துள்ளது, என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேபோல தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் கிளைட் கிராஜ்டோவும் பா.ஜனதாவை தனது டுவிட்டர் பக்கத்தில் கடுமையாக விமர்சித்துள்ளார். அவர் அக்கட்சியை உறிஞ்சி உயிர்வாழும் உயிரினம் என்று, தெரிவித்திருக்கிறார். பா.ஜனதாவை வெளிநாட்டு படங்களில் வரும் கௌபாய் கதாபாத்திரத்துடன் ஒப்பிட்டு வரையப்பட்ட கேலிச் சித்திரம் ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அதில் கௌபாய் தனது இரு கைகளிலும் துப்பாக்கிகளுக்கு பதிலாக பெற்றோல் பம்ப் முனைகளை வைத்துக்கொண்டு சாமானிய மக்களை நோக்கி அதை உயர்த்திப் பிடிக்க, அதைப் பார்த்து மக்கள் அஞ்சி நடுங்குவது போல சித்தரிக்கப்பட்டுள்ளது.

கேலிச் சித்திரத்தின் முகத்தில் பா.ஜனதா தேர்தல் சின்னமான தாமரை பொறிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் ஆளும் சிவசேனா தலைமையான மகா விகாஸ் அகாடி அரசில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# வசதியில்லாத மக்களுக்கு குறைந்த செலவில் சுகாதாரம் வழங்குவதில் தமது அரசு முழு கவனம் செலுத்துவதாக மோடி அறிவிப்பு

உலக சுகாதார அமைப்பு அறிவிப்பின்படி, ஆண்டுதோறும் ஏப்ரல் 7 ஆம் திகதி உலக சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதையொட்டி இந்தியப் பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் சில விடயங்களைப் பதிவிட்டிருந்தார்.

அந்த டுவிட்டர் பதிவில், இந்திய மக்கள் அனைவரும் நல்ல ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்துடன் இருக்க ஆசீர்வதிக்கப்பட்டும் என்றும், இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பை அதிகரிக்க இந்திய அரசு அயராது உழைத்து வருகிறது என்றும், உலகின் மிகப்பெரிய சுகாதாரத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் என்பது ஒவ்வொரு இந்தியரையும் பெருமைப்படுத்துகிறது, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி ஜன் ஔதி போன்ற திட்டங்களின் பயனாளிகளுடன் நான் தொடர்பு கொள்ளும்போது நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். குறைந்த கட்டணச் சுகாதார சேவையை வழங்குவதில் நாம் செலுத்தும் அவதானமானது, ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு குறிப்பிடத்தக்க சேமிப்பை உறுதி செய்துள்ளது. அதேநேரத்தில், ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேலும் அதிகரிக்க அரசாங்கம் ஆயுஷ் வலையமைப்பைப் பலப்படுத்தி வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் மருத்துவக் கல்வித்துறை விரைவான மாற்றங்களைச் சந்தித்துள்ளது. பல புதிய மருத்துவக் கல்லூரிகள் வந்துள்ளன. உள்ளூர் மொழிகளில் மருத்துவப் படிப்பை செயல்படுத்துவதற்கான அரசின் முயற்சிகள் எண்ணற்ற இளைஞர்களின் விருப்பங்களுக்குச் சிறகு தரும், என்றும் மோடி தனது டுவிட்டர் பதிவில் குறித்துள்ளார்.





# கல்முனை பஸ் நிலையம் புனரமைத்து கையளிப்பு

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைப்பு செய்யப்பட்டு, அழகுபடுத்தப் பட்டுள்ள கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலைய வளாகம் மக்கள் பாவனைக்காக கல்முனை மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆவணங்களை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப்பிடம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பி.எஸ். ஜெயதிஸ்ஸ நேற்றுக் கையளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜெளஸி, வேலைகள் அத்தியட்சகர் எம்.உதய குமரன், உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ். எம்.நெளாத், நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் ஜீ.கே. சி.கருணாரத்ன, நகர திட்டமிடல் உத்தியோ கத்தர்களான எம்.எம்.முஸ்தாக், வி.துஷித்ரா உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பிலுள்ள நகர அபிவிருத்தி அமைச்சினால் தேசிய ரீதியில் 100 நகரங்களை செழுமைமிகு நகரங்களாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பஸ் நிலையம் புனரமைக்கப்பட்டது. இந்த பஸ்நிலையம் நீண்ட காலமாக பள்ளம் படுகுழிகளுடன் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# நிந்தவூர் மடத்தடியில் சிறப்பாக நடைபெற்ற மகாகும்பாபிஷேக குடமுழுக்குப்பெருவிழா





(காரைதீவு நிருபர் சகா)

நிந்தவூரில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற அருள்மிகு மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் ஆவர்த்தன அஷ்ட பந்தன பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேக பிரதம குருவான ஆலயபிரதமகுருவும் கிழக்கிலங்கையின் பிரபல சிவாச்சாரியாரியாருமான சிவாகம வித்யாபூஷணம் சிவாச்சார்ய திலகம், பிரதிஷ்டாதிலகம் ஜோதிடவித் யாதத்துவநிதி விபுலமணி சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் செயற்பட்டார்கள்.

கடந்த 2ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5மணிக்கு கர்மாரம்பத்துடன் கிரியைகள் யாவும் ஆரம்பமாகின. எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் திங்கள் காலை 8மணி முதல் செவ்வாய்க்கிழமை வரை பெருந்திரளான பக்தர்களுடன் நடைபெற்றது.

மஹா கும்பாபிஷேகம் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 9.12மணிமுதல் 10.27மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலிருந்து பெருந்திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

ஆலயகுரு சிவஸ்ரீ ச.ஹோவர்த்தனசர்மாஒழுங்கமைப்பில் சர்வசாதகராக ஆரியபாாவிற்பன்னர் சிவஸ்ரீ சண்முக மயூர வதனக்குருக்களும் பிரதிஸ்டா குருவாக கிரியாஜோதி சிவஸ்ரீ வே.யோகராசாக்குருக்களும் செயற்பட்டனர்.

ஆலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய அன்னதான மண்டபத்தில் பாண்டிருப்பைச் சேர்ந்த கோ.ஜனபாலச்சந்திரன்(ஆஸ்திரேலியா) அன்னதானத்தை வழங்கினார். சுமார் 3,000 பேரளவில் பசியாறினர்.

ஆலய தலைவர் கி.ஜெயசிறிலின் தலைமையில் ஆலோசகர் வி.ரி. சகா தேவராஜாவின் நெறிப்படுத்தலில் சிவாச்சாரியார்கள் உள்ளிட்ட சேவையாளர்களுக்கு சான்றிதழ், தட்சணை மற்றும் வஸ்திரங்கள் வழங்கப்பட்டன.

கும்பாபிஷேகப் பெருவிழா நிறைவு பெற்றதும் மழை பொழிந்தமை குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24தினங்களுக்கான மண்டலாபிசேக பூஜைகள் ஆரம்பமாகின.




# கந்தளாய் சட்டத்தரணிகள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

நாட்டின் பொருளாதார நெருக்கடியை ஒட்டி நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் போராட்டத்தின் ஒரு பகுதியாக கந்தளாய் சட்டத்தரணிகள் சங்கத்தினரால், நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இனவாதத்தால் நாட்டை நாசமாக்கியது போதும், எமது சிறார்களுக்காய் இலங்கையை பாதுகாப்போம், லோன் லீசிங் செலுத்த முடியாது, நிவாரணம் வழங்கு மற்றும் 74 வருட அரசியல் சாபத்தை முடிவுக்கு கொண்டு வருவோம் போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.

பின்னர் பிரதான வீதி வரை பேரணியாக வந்து தங்களது ஆதங்கங்களை வெளிப்படுத்தும் விதத்தில் அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்களையும் சட்டத்தரணிகள் எழுப்பினர்.

# விபத்தில் சாவு

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் குருக்கள் மடம் முருகன் கோயிலுக்கு முன்பாக நேற்று மாலை தான் செலுத்திய மோட்டார் சைக்கிளின் கட்டுப்பாட்டை இழந்த குருக்கள் மடத்தைச் சேர்ந்த 22 வயதான எம்.ரதீசன் எதிரே இருந்த மின்கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார். களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருக்கள் மடத்திலேயே இச் சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது. விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சம்மாந்துறையில் தொடர்ந்து அரச எதிர்ப்புப் போராட்டம்

அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பிரதேசத்தில் மூன்றாவது நாளாக நேற்று வியாழக்கிழமை இரவும் ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹசன் அலி தலைமையில் தீப்பந்தங்களை கையில் ஏந்திக்கொண்டு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பிரதான வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிக எண்ணிக்கையான இளைஞர்கள், விவசாய அமைப்புக்களைச் சேர்ந்தோர், பொதுமக்கள் கலந்து கொண்டு 'கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு!', 'பச்சிளம் குழந்தைகளைக் கொன்ற கோட்டாவே வெளியேறு!', 'நாட்டில் எதுவுமில்லை மக்களுக்கு பசி', 'பசளை தா!', 'பெற்றோல் தா!', 'மொட்டின் முட்டுக்களே வெளியேறுங்கள்!', 'கோட்டா நாட்டை விட்டு வெளியேறு!','அடுத்து இறக்கப்போவது போவது யார்?', 'ஆட்சி செய்து கிழித்தது போதும்!', 'குடும்ப ஆட்சி வேரோடு ஒழிக!', 'பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, கோட்டாவுக்கு அறிவும் இல்லை!', 'கோட்டா சேர், தயவு செய்து போங்க சேர்', 'வெந்தது நாடு; கோட்டாவ தூக்கி வெளியில் போடு!', 'பொருளாதார நெருக்கடி இரவெல்லாம் கொசுக்கடி', 'பஸிலே வெளியேறு', 'அரசே வீட்டுக்குப் போ' போன்ற கோஷங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சம்மாந்துறை பொது சந்தையிலிருந்து ஆரம்பித்து ஹிஜ்ரா சந்திவரை சென்ற ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டமையுடன் அதனைக் கட்டுப்படுத்தும் வேலைகளை சம்மாந்துறை பொலிஸார் துரிதகதியில் மேற்கொண்டிருந்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோட்டா தலைமையிலான அரசு விரைவில் கவிழும்!

## தலவாக்கலையில் இராதாகிருஷ்ணன் சூளுரை

தற்போது இலங்கை மக்களும் கொதித்தெழுந்துள்ளனர். எனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு விரைவில் கவிழும் என நாடாளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, தொடர் மின்வெட்டு, பொருள்கள் விலையேற்றம் ஆகிய வற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்நிலைமையை உருவாக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சூளுரைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

மக்கள் சக்திக்கு முன் அரசியல் சக்தியால் துணிந்து நிற்க முடியாது. நிச்சயம் மண்டியிட்டாக வேண்டும். இதுவே வரலாறு எமக்குக் கற்று தந்துள்ள பாடம். சர்வாதிகாரிகளான சதாம் உசைன், முகாகே போன்றவர்களின் சாம்ராச்சியங்கள்கூட மக்கள் எழுச்சியால் சரிந்தன. அதேபோல அநீதிகள் தலைவிரித்தாடும்போது கால சக்கரமும் கைகட்டி வேடிக்கை பார்க்காது, அது தனக்கே உரிய பாணியில் வேலையை காட்டிவிடும்.

அந்தவகையில் ராஜபக்ஷக்களை தலையில் தூக்கி வைத்து ஆனந்த கூத்தாடியவர்கள்கூட , ராஜபக்ஷக்கள் வீடு செல்ல வேண்டும் என வலியுறுத்தி பொங்கியெழுந்து போராடுகின்றனர். எமது மக்களும் வீதிக்கு இறங்கிவிட்டனர். இதனை நாம் நாட்டை மீட்பதற்கான சுதந்திர போராட்டமாகவே கருதுகின்றோம். எனவே, இன, மத, பேதமின்றி அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து தற்போதுபோலவே தொடர்ந்தும் போராட வேண்டும். – என்றார்.



## ஹர்ஷ டி சில்வாவை தற்காலிக ஜனாதிபதியாக்க நாமல் ஆதரவு?

ஹர்ஷ டி சில்வாவை தற்காலிக ஜனாதிபதியாக நியமிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியமையுடன் அதற்கு ஆதரவளித்திருக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள சிங்கள ஊடகமொன்று, நேற்று (வியாழக்கிழமை) காலை சபை அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ விசேட அறிக்கையொன்றை விடுத்தாக எனத் தெரிவித்துள்ளது.

மேலும் ஹர்ஷ டி சில்வாவை தற்காலிக ஜனாதிபதியாக நியமிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாமல் ராஜபக்ஷ கூறியமையுடன்அதற்குஆதரவளிக்கிறேன் எனவும் தெரிவித்தார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இதன்போது நாடாளுமன்றத்தை திறந்து வைப்பதற்கான மணியோசை ஒலிக்க ஆரம்பித்திருந்ததுடன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசை பதவி விலகக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

ஜனாதிபதிமற்றும்அவரதுஅரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரி வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) மதியம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் வவுனியா, பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஆரம்பித்த ஆர்ப்பாட்ட பேரணி ஹொரவப்பொத்தானை வீதியூடாக சென்று பஸார் வீதியை அடைந்து அங்கிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தி ஊடாக பழைய பஸ் நிலையத்தை அடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'கோட்டபாய பதவி விலகு, இந்த அரசாங்கம் வேண்டாம், அமெரிக்காவுக்கு ஓடுங்கள், எங்களை வாழவிடு' என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும், கோஷங்களையும் எழுப்பியமையுடன் ஜனாதிபதி கோட்டாபய மற்றும் சகோதரர்களான மஹிந்த, பஸில் ஆகியோருக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

மணிக்கூட்டு கோபுர சந்தி மற்றும் பழைய பஸ் நிலையம் என்பவற்றுக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் அரை மணி நேரம் பிரதான வீதியை மறித்தமையால் ஒரு வழிப் பாதையூடான போக்குவரத்துக்களை பொலிஸார் ஒழுங்குபடுத்தி மேற்கொண்டிருந்தனர்.



## ஆஸியிலிருந்து நாடு வந்தார் மத்தியவங்கியின் புதிய ஆளுநர்

மத்திய வங்கியின் அடுத்த ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று (வியாழக்கிழமை) ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கை வந்தடைந்தார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நந்தலால் வீரசிங்க பரிந்துரைக்கப்பட்ட நிலையில் அவர் நேற்று நாடு திரும்பியதும் மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நியமனத்தை பெற்றுக்கொண்டார்.

இதற்கிடையில், எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நாட்டை விட்டு வெளியேற முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட கப்ராலுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஒரு வருடத்துக்கு சம்பளம் பெறேன்!

### நாடாளுமன்ற செயலருக்கு ஹரின் கடிதம்



ஒரு வருடத்திற்கு சம்பளம் பெற மாட்டேன் எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கடிதம் எழுதியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு சில தியாகங்களை மக்களுக்குக் காட்ட வேண்டிய கடமை உள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

அதன்படி, ஒரு வருடத்துக்கு சம்பளம் பெற மாட்டேன் என்றும் நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் உணவு உட்கொள்ள மாட்டேன் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைகள் தொடர்பில் மன்னாரில் விசேட கருத்தமர்வு

மனித உரிமைகள் தொடர்பான விசேட கருத்தரங்கு மன்னாரில் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வடக்கு மாகாண பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் கலந்து கொண்டு அடிப்படை மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்களை வழங்கினார். இதன்போது மனித உரிமைகள் தொடர்பாகவும், காணி பிணக்குகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் போது மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து 30 பேர் தெரிவு செய்யப்பட்டு கருத்தரங்கு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஜான்சன் , மன்னார் நகரசபை உறுப்பினர்கள் , மன்னார் மனித உரிமை செயல்பாட்டாளர்கள் , மன்னார் சிவில் சமூக அமைப்பினர் மற்றும் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551பு, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.04.2022இல் வெளியிடப்பெற்றது.